**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 12–ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.263/2025</u>**

CNR.NO.TNTU02–003052–2025

அரசுக்காக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
கந்திலி காவல் நிலையம்,
திருப்பத்தூர் ...... புகார்தாரர்
குற்ற எண்.83/2024

// எதிரிடை//

A1 – மணி, த/பெ.கோவிந்தசாமி
A2 – யுவராஜ், த/பெ.மாது
A3 – விஜய், த/பெ.வேடியப்பன் .... குற்றம் சாட்டப்பட்டர்கள்

(குற்றம்சாட்டப்பட்டவர்கள் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண்.263/2025 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | கந்திலி காவல் நிலையம்,<br>குற்ற எண்.83/2024 |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் விவரம் | | |
| 3 | பெயர் | A1 – மணி<br>A2 – யுவராஜ்<br>A3 – விஜய் |
| 4 | தந்தை பெயர் | A1 – த/பெ.கோவிந்தசாமி<br>A2 – த/பெ.மாது<br>A3 – த/பெ.வேடியப்பன் |
| 5 | தொழில் | – |
| 6 | முகவரி | சின்னசொக்கனாம்பட்டி கிராமம்,<br>காக்கங்கரை அஞ்சல், திருப்பத்தூர். |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

<table>
<tr><td>7</td><td>வயது</td><td colspan="3">A1 – 25<br>A2 – 20<br>A3 – 28</td></tr>
<tr><td colspan="5">நாள்</td></tr>
<tr><td>8</td><td>குற்ற நிகழ்வு</td><td colspan="3">01.02.2024</td></tr>
<tr><td>9</td><td>புகார்</td><td colspan="3">02.02.2024</td></tr>
<tr><td>10</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">A1 & A3 – 02.02.2024<br>A2 – Appeared on u/s.41A Cr.P.C.Notice</td></tr>
<tr><td>11</td><td>எதிரி பிணையில் வந்த நாள்</td><td colspan="3">A1 to A3 – 05.02.2024</td></tr>
<tr><td>12</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">07.11.2025</td></tr>
<tr><td>13</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">12.06.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு</td><td colspan="3">12.06.2026</td></tr>
<tr><td>15</td><td>தாமதத்திற்குரிய காரணம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td colspan="5">வழக்கின் நிலை</td></tr>
<tr><td>16</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td>17</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">29.04.2024</td></tr>
<tr><td>18</td><td>BNSS பிரிவு.263<br>(முதல் கேள்வி)</td><td colspan="3">28.08.2025</td></tr>
<tr><td>19</td><td>பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு</td><td colspan="3">Crl.MP No. 1482/2026<br>நாள்: 29.05.2026 (Allowed)</td></tr>
<tr><td rowspan="7">20</td><td rowspan="7">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><td>அரசு தரப்பு சாட்சி</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>07.11.2025</td><td>08.06.2026</td></tr>
<tr><td>அ.சா. 2</td><td>13.11.2025</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 3</td><td>16.04.2026</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 4</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>அ.சா. 5</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>அ.சா. 6</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
</table>



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா. 7 | 26.05.2026 | 26.05.2026 |
| | | அ.சா. 8 | 08.06.2026 | - |
| 21 | BNSS பிரிவு.351(1)(b) (வினாவல்) | 12.06.2026 | | |
| 22 | தலைமறைவு எதிரிகளின் விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இவ்வழக்கு கடந்த 21.08.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரிக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாது M.Com, B.L., D.L.L., அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**(1)** இவ்வழக்கில் கடந்த 01.02.2024-ம் தேதி காலை 08.30 மணிக்கு கந்திலி காவல்நிலைய எல்லைகுட்பட்ட சின்ன சொக்கணாம்பட்டி கிராமம், பஸ் ஸ்டாப் அருகே உள்ள நீர்தேக்கு தொட்டி அருகே புகார்தாரர் கலைச்செல்வன் இருந்தபோது, அங்கு வந்த 1 முதல் 3 எதிரிகளை புகார்தாரர் யார் என்று பார்த்தபோது, எதிரிகள் மூவரும் புகார்தாரரைப் பார்த்து அசிங்கமாகத் திட்டியதாலும், கையால் மாறி மாறி முதுகின் மீதும் முதுகின் மீதும், கன்னத்தின் மீதும் அடித்ததாலும், தொடர்ச்சியாக 1-ம் எதிரி மாட்டு கயிறை பிடுங்கி புகார்தாரரின் கழுத்திலும், வலது பக்க இடுப்பின் மீதும் ஓங்கி ஓங்கி அடித்து,



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

புகார்தாரருக்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தியதோடு, எதிரிகள் மூவரும் புகார்தாரரைப் பார்த்து "இனிமேல் எங்ககிட்ட வச்சிக்கிட்டா உன்னை கொலை செய்து இதே இடத்தில் புதைத்து விடுவேன்" என்று மிரட்டியதாலும், 1–ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு.294(b), 323, 324, 506(i)–ன்படியும், 2 மற்றும் 3–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு.294(b), 323, 506(i)–ன் கீழும் இறுதியறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

**(2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் ஆஜரானவுடன் நகல்கள் வழங்கப்பட்டு, குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3)** அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான ஆவணங்கள் மற்றும் **சா.பொ.1** சான்றுப் பொருளும் வழக்கிற்கு ஆதாரங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(4)** அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சியம்" என்றும், அவர்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>**

**(5)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 கலைச்செல்வன் எதிரிகள் தன்னை தாக்கியது குறித்து கடந்த 02.02.2024 அன்று கந்திலி காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 புகாரைப் பெற்றுக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சோபியா (அ.சா.ஆ.4) முதல் தகவல் அறிக்கை பதிவு



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

செய்து, தனது புலன் விசாரணையை முடித்து 1–ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு.294(b), 323, 324, 506(i)–ன்கீழும் 2 மற்றும் 3–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு.294(b), 323, 506(i)–ன் கீழும் இறுதியறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 324, 506(i)–ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

**(i) அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,**

**(6)** அ.சா.1 தனது சாட்சியத்தில் 01.02.2024–ம் தேதி காலை 08.30 மணிக்கு சின்னசொக்கனாம்பட்டி பஸ் ஸ்டாப் அருகே உள்ள தண்ணீர் டேங்க் அருகில், மாடு கட்டிவிட்டு கையில் கயிற்றுடன் நின்றுகொண்டிருந்தபோது, வியாபாரி M.G என்பவர் மாடுகளை டெம்போவில் ஏற்றிக்கொண்டிருக்க தன்னை உதவிக்கு வருமாறு அழைத்ததாகவும், அப்போது இருசக்கர வாகனத்தில் மணி, விஜய், யுவராஜ் ஆகியோர் வீட்டிற்குச் சென்றபோது தான் திரும்பி பார்த்தேன் என்றும், அவர்கள் 200 மீட்டர் தூரம் சென்றுவிட்டு திரும்ப வந்து, ஆஜர் எதிரிகள் தன்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டிவிட்டு, தன்னை கைகளால் சரமரியாக கழுத்து, நெஞ்சு மற்றும் வயிற்று பகுதியில் அடித்தனர் என்றும், அப்போது மணி மற்றும் யுவராஜ் ஆகியோர் தன் கையில் இருந்த கயிற்றைப் பிடுங்கி தனது கழுத்தை நெறித்தனர் என்றும், பின்னர் அதே கயிற்றால் விஜய், யுவராஜ் ஆகியோர் தன்னை அடித்தார்கள் என்றும், அதன்பிறகு 1–ம் எதிரி மணி தன்னை அசிங்கமாகத்திட்டி "என்னிடம் வைத்துக்கொண்ட இங்கேயே அடித்து



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

புதைத்துவிடுவேன்" என்று மிரட்டினார் என்றும், அதன் பின்னர் ஊர்க்காரர்கள் அங்கு வருவதைப் பார்த்து அவர்கள் வண்டியை எடுத்து சென்றுவிட்டதாகவும், இதுகுறித்து கந்திலி காவல் நிலையத்தில் தான் புகார் அளித்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் கயிற்றால் தான் எதிரிகள் தன்னை தாக்கினார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(7) இவரின் மூலம் புகார் அ.சா.ஆ.1–ஆகவும், எதிரிகள் அ.சா.1–ஐ தாக்கப் பயன்படுத்திய கயிறு சா.பொ.1–ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவரது சாட்சியமானது அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை நிரூபணம் செய்யும் வகையில் அமைந்துள்ளது.

மாண்பமை உச்ச நீதிமன்றம், *N.S. Madhanagopal & Anr. vs. K.Lalitha (2022 INSC 1323)* என்ற வழக்கில், *"Mere usage of abusive words do not constitute an offence u/s. 294(b) of Indian penal code. Instead, there must be further proof that the obscene act or utterance was made to the annoyance of* others." என்று தெளிவுபடுத்தி உள்ளதால்,

இந்த வழக்கில் இ.த.ச.பிரிவு.294(b)–இன் சாராம்சங்கள் உள்ளடக்கப்படாததால், இக்குற்றச்சாட்டு எதிரிக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை.

**<u>(ii) அ.சா.1–ன் காயச்சான்றிதழைப் பரிசீலிக்கையில்,</u>**

**(8)** அ.சா.1–ற்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.6 திரு.செல்வநாதன் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 02.02.2024 அன்று மதியம் 12.30 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் தான் பணியிலிருந்தபோது, சிகிச்சைக்காக வந்த கலைச்செல்வன் என்பவரை விசாரித்ததில், அவரை அன்றைய தினம் காலை 08.30 மணியளவில் கோவிந்தாபுரத்தில், தன்னை அடையாளம் தெரிந்த 3 ஆண் நபர்கள் தடி,



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

கம்பு, கையால் தாக்கியதாகக் கூறியதாகவும், அவரை பரிசோதித்தபோது, அவர் சுயநினைவுடன் காணப்பட்டார் என்றும், அவருக்கு வெளிப்புற காயங்கள் இல்லை என்றும், உடல் வலி இருப்பதாகவும் கூறினார் என்றும், மேற்படி அவரை வெளிப்புற நோயாளியாக சிகிச்சையளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கினேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவரின் மூலம் விபத்துப் பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(9)** சம்பவமானது 01.02.2024 அன்று நடந்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்திருக்க அவர் மருத்துவமனைக்கு 02.02.2024 அன்று சிகிச்சைக்காக ஒரு நாள் தாமதமாக சென்றிருப்பது இயல்பான மனிதரின் நடத்தையைப் போன்று இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>(iii) இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3, ஆகியோரின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,</u>**

**(10)** இவ்வழக்கின் அ.சா.2 திரு.கார்த்திகேயன் சம்பவம் குறித்து கேள்விப்பட்ட சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.3 திரு.M.G. வழக்கு சம்மந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், இவர்களது சாட்சியமானது அரசு தரப்பு வழக்கிற்குப் பலன் அளிக்கவில்லை.

**<u>(iv) இவ்வழக்கின் கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.4–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,</u>**

**(11)** இவ்வழக்கின் கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.4 திரு.சூர்யா தனது குறுக்கு விசாரணையில், சம்பவம் குறித்து தனக்கு நேரடியாகத்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், இவரது சாட்சியமானது அரசு தரப்பு வழக்கிற்குப் பலன் அளிக்கவில்லை.

**(v) இவ்வழக்கின் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.8 ஆகியோரின் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,**

**(12)** இவ்வழக்கின் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.5 முருகன் மற்றும் அ.சா.8 பிரகாஷ் ஆகியோர் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் தங்களுடையது அல்ல என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால், வழக்குச்சொத்து கைப்பற்றப்பட்டது குறித்து இந்நீதிமன்றம் சந்தேகம் அடைகிறது.

**(vi) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,**

**(13)** அ.சா.7 காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சோபியா தனது நீதிமன்ற சாட்சியத்தில், அ.சா.1–னிடம் (அ.சா.ஆ.1) புகாரைப் பெற்று (அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்து, (அ.சா.ஆ.5) பார்வை மகஜர், (அ.சா.ஆ.6) மாதிரி வரைபடம், (அ.சா.ஆ.7 – கைப்பற்றுதல் மகஜர்) தயார் செய்து, வழக்குச் சொத்தை (அ.சா.ஆ.8) படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது மற்றும் இவ்வழக்கை மேற்கொண்டு புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.அஜித்குமார் அ.சா.1–ற்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.செல்வநாதன் என்பவரை விசாரித்து

KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

வாக்குமூலம் பதிவு செய்து (அ.சா.ஆ.3) காயச்சான்றிதழ் பெற்றது மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து, சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில், எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**(vii) பகுப்பாய்வு :**

**(14)** இவ்வழக்கில் 1–ம் எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவு.294(b), 323, 324, 506(ii) மற்றும் 2 & 3–ம் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவு.294(b), 323, 506(ii)–ன்படியும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

**(viii) எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b) குறித்துப் பரிசீலிக்கையில்,**

**(15)** மேற்குறிப்பிடப்பட்டவாறு மாண்பமை உச்ச நீதிமன்றத்தின், N.S. Madhanagopal & Anr. vs. K.Lalitha (2022 INSC 1323) என்ற வழக்கின் தீர்ப்பின்படி, இந்த வழக்கில் இ.த.ச.பிரிவு.294(b)–இன் சாராம்சங்கள் உள்ளடக்கப்படாததால், இக்குற்றச்சாட்டு எதிரிகளுக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**(ix) 1–ம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.323, 324 மற்றும் 2 & 3–ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.323–இன் கீழான குற்றச்சாட்டுக்கள் குறித்து பரிசீலிக்கையில்,**

**(16)** அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை கைகளால் கழுத்து, நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் தாக்கியதாகவும், மாடு கட்டும் கயிற்றால் தனது கழுத்தை நெறித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், (அ.சா.ஆ.3) காயச்சான்றிதழைப் பரிசீலிக்கும்போது, அவருக்கு



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

வெளிப்புறக் காயங்கள் இல்லை என்றும், தனக்கு உடல்வலி இருப்பதாக மட்டுமே கூறியதாக அ.சா.6 மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளார்.

பொதுவாக காயமுற்ற சாட்சியின் சாட்சியத்திற்கு அதிக மதிப்பு உள்ளதாக கருதப்படுகிறது. அவரது சாட்சியத்தில் குறைபாடுகள் ஏதும் இல்லாதபட்சத்தில், அதனடிப்படையில் மட்டும் கூட குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கருதப்படலாம். ஆனால் அ.சா.1 எதரிகள் தன்னை கழுத்து, நெஞ்சு மற்றும் வயிறு பகுதிகளில் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும், மருத்துவரிடம் பொதுவாக தனது உடல் முழுவதும் வலி உள்ளதாக தெளிவற்ற நிலையில் கூறியுள்ளதாக காயச்சான்றிதழ் மூலம் அறியப்படுகிறது. மற்ற அரசு தரப்பு சாட்சிகளும் அ.சா.1–ன் சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக சாட்சியம் அளிக்காதது அரசு தரப்பு வழக்கின் மீது கூடுதல் சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. எனவே அதனடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான இக்குற்றச்சாட்டுக்களானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(x) எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.506(i)–இன் கீழான குற்றச்சாட்டு குறித்து பரிசீலிக்கையில்,**

(17) அ.சா.1–ற்கு ஏற்பட்டுள்ள காயமானது அரசு தரப்பில் நிரூபிக்கப்படாதபட்சத்தில், சம்பவத்தின்போது எதிரிகள் தன்னை கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளித்திருப்பது அவருக்கு பீதியை ஏற்படுத்தியிருக்க வாய்ப்பில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>(xi) முடிவாக</u>**

**(18)** இவ்வழக்கில் 1–ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b) 323, 324, 506(i)–இன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 மற்றும் 3–ம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b), 323, 506(i)–இன் கீழான குற்றச்சாட்டுக்களும், அரசு தரப்பில் போதுமான சாட்சியங்களால் நிரூபிக்கப்படாததால், எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்ப்பளித்து, BNSS பிரிவு.271(1)–இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**(19)** எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு இரத்து செய்து உத்தவிடப்படுகிறது.

**(20)** இவ்வழக்கில் **CP.No.225/2024**–ல் கண்ட வழக்குச்சொத்தான **சுமார் 2 மீட்டர் நீளமுள்ள மாடு கட்டும் வெள்ளை நிற கயிறு** ஒன்றை மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்துத் தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தங்களுக்குப் பிறகு 2026–ஆம் வருடம் ஜீன் மாதம் 12–ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.II**
**திருப்பத்தூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>** :

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வகை |
|---|---|---|
| அ.சா.1 | திரு.கலைச்செல்வன், த/பெ.ராஜேந்திரன் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.கார்த்திகேயன், த/பெ.நித்யானந்தம் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.MG, த/பெ.முனியன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.சூர்யா, த/பெ.மாரியப்பன் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.5 | திரு.முருகன், த/பெ.மாரியப்பன் | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.6 | திரு.செல்வநாதன், த/பெ.ஜெயபால் | மருத்துவ சாட்சி |
| அ.சா.7 | திரு.சோபியா, த/பெ.பிரகாசம் | இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்த அதிகாரி |
| அ.சா.8 | திரு.பிரகாஷ், த/பெ.சண்முகம் | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| சான்றாவண எண். | சான்றாவணத்தின் வகை | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.3 | விபத்துப் பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.6 |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.4** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| **அ.சா.ஆ.5** | பார்வை மகஜர் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.6** | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.7** | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.8** | படிவம் – 91 | அ.சா.7 |

**அரசு தரப்பு சான்று பொருள் – CP.225/2024**

| **சான்றுப் பொருள் எண்.** | **சான்றுப்பொருள்** | **சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர்** |
|---|---|---|
| 1 | சுமார் 2 மீட்டர் நீளமுள்ள மாடு கட்டும் வெள்ளை நிற கயிறு | அ.சா.1 |

**எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

**எதிரி தரப்பு சான்று பொருள் – இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**பின்குறிப்பு**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. நீதிமன்ற விசாரணையின்போது, எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

**//உண்மை நகல்//**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**